**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006.**

ந.க.எண்.034785/எம் 1/இ1/2025 நாள்:24.07.2025

பொருள்:- பள்ளிக்கல்வி – 2025-26 மன்றச் செயல்பாடுகள் – அரசு பள்ளியில் பயிலும் 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான சிறார் திரைப்படம் மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் திரையிடுதல் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை:-
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண். /எம்/இ1/2022 நாள் 19.05.2023.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.034785/ எம்/இ1/2025 நாள்: 30.06.2025

.......

2022-23 ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பு மாணவர்கள் கண்டுணறும் வகையில், சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன.

பள்ளிகளில் சிறார் திரைப்படங்களை திரையிடுதல் மூலம் மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றலை வளர்த்தல். விரிசிந்தனை மற்றும் விமர்சிக்கும் திறன் உள்ளிட்ட திறன்களை மேம்படுத்த இந்நிகழ்வு தூண்டுகோலாக அமைகிறது.

<u>சிறார் திரைப்பட மன்றம் நோக்கங்கள் (Movie Screening Club)</u>

- திரைப்படங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்தல், திரைப்பட நுட்பங்களைப் புரிந்துகொள்ளுதல், ஊடக கல்வியறிவு மற்றும் விமர்சன சிந்தனையை வளர்த்தல்.
- திரைப்பட விமர்சனங்கள், திரைக்கதை எழுதுதல், நடிப்பு அல்லது திரைப்படத் தயாரிப்பு மூலம் மாணவர்கள் தங்கள் எண்ணங்கள் மற்றும் முன்னோக்குகளை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்துதல்.
- கேமராக்கள், எடிட்டிங் மென்பொருள், லைட்டிங் மற்றும் ஒலி போன்ற திரைப்படத் தயாரிப்பு தொடர்பான தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துதல்.

Scanned with OKEN Scanner

- சினிமா துறையில் கதை எழுதுதல், திரைக்கதை, இயக்கம், எடிட்டிங், இசை போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடும் நபர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- திரைப்படக் கலையில் ஆர்வமுள்ள மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, திரைப்படம் தயாரிக்கும் அம்சங்களின் அடிப்படையில் போட்டிகளில் பங்கேற்க செய்தல்.

**சிறார் திரைப்படம் திரையிடுதல்**

அனைத்து அரசு நடுநிலை. மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு மாதமும், சிறார் திரைப்படம் திரையிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் திரையிடப்படவுள்ள திரைப்படம் EMIS தளத்தில் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படத்தினை திரையிடுவதற்கு முன்பாகவே இணைப்பு-1ல் வழங்கப்பட்டுள்ள அனைத்து நெறிமுறைகளையும் தலைமையாசிரியர் மற்றும் சிறார் திரைப்பட மன்றப் பொறுப்பாசிரியர் உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு மாதமும் அவரவர் பள்ளியில் 6-முதல் 9-ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து வகுப்பு மற்றும் பிரிவுகளுக்கும் (all classes and sections of grades 6 to 9) சிறார் திரைப்படமானது திரையிடப்படுவதை உறுதி செய்வது சிறார் திரைப்பட மன்றப் பொறுப்பாசிரியரின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிட்ட பின்னர், மாணவர்களை குழுக்களாக (House System 5 Groups) பிரித்து, அவர்கள் பார்த்த திரைப்படம் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிடப்பட்ட பிறகு பின்வரும் செயல்பாட்டினை மாணவர்களை மகிழ்முற்றம் மாணவர் குழுக்களாக பிரித்து மேற்கொள்ளுதல் வேண்டும்.

- ஒவ்வொரு குழுவும் திரைப்படத்தின் மூலக்கரு / மையக்கருத்து குறித்தும். அக்கருத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

- ஒவ்வொரு குழுவும் திரையிடப்பட்ட படத்திற்கு இசைக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தல் வேண்டும்.
- பின்னர், இணைப்பு-3ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளில் பொறுப்பாசிரியர் ஏதேனும் ஒரு செயல்பாட்டினை தேர்ந்தெடுத்து மாணவர்களை மகிழ்முற்றம் மாணவர் குழுக்களாக பிரித்து அவர்களை அச்செயல்பாட்டினை மேற்கொள்ள செய்தல் வேண்டும்.
- பின்னர், ஒவ்வொரு குழுவும் அவர்களின் படைப்புகளை வகுப்பறையில் காட்சிப்படுத்தி எடுத்துரைத்தல் வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு குழுவும் தங்களின் படைப்புகளை வெளிப்படுத்திய பின்னர், குழுக்களுக்கு ஆசிரியரால் மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வாறாக வழங்கப்படும் மதிப்பெண்கள் Class Room Score board – ல் சார்ந்த House Class Leader மூலம் பதிவிடப்படுதல் வேண்டும்.
- மாணவர்களின் படைப்புகளை வகுப்பறை மற்றும் பள்ளி வளாகத்தில் காட்சிப்படுத்துவதுடன், காலை வணக்கக் கூட்டத்தில் வெற்றிப் பெற்ற மாணவர் குழுவின் படைப்புகளை எடுத்துரைக்க செய்தல் வேண்டும்.
- மேலும், பள்ளியளவிலான சிறந்த படைப்புகளை பள்ளிக் கல்வித் துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் (தேன்சிட்டு) இடம் பெற்றிட சிறார் திரைப்பட மன்ற பொறுப்பாசிரியர் மற்றும் தலைமையாசிரியர் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

**முக்கிய குறிப்பு : சிறார் திரைப்பட மன்றம் சார்ந்த செயல்பாடுகள் அனைத்தும், பிற மன்றச் செயல்பாடுகளைப் போல மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வாறு மாணவர் குழுக்களாக செயல்பாடுகளில் ஈடுபடும்போது, மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாக்கப்பட்டு, அனைத்து மாணவர்களும் அவரவர் குழு வெற்றி பெற தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்பு உருவாகும்.**

**2025-26 ஆம் கல்வியாண்டின் முதல் சிறார் திரைப்படம்**

கடந்த கல்வியாண்டில் மாநில அளவிலான சிறார் திரைப்பட போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் தயார் செய்த குறும்படங்கள் "TOP-10(2024-25)" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு, 2025-26 ஆம் கல்வியாண்டின் முதல் சிறார் திரைப்படமாக ஜுலை

Scanned with OKEN Scanner

மாதம் திரையிட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாணவர்களின் படைப்புக்களை திரையிடும்போது, அவர்களின் படைப்புகள் அங்கீகரிக்கப்படுவதுடன், அனைத்து மாணவர்களும் இச்செயல்பாட்டில் பங்குபெற ஊக்குவிக்கப்படுவர்.

**கண்காணித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்**

➢ **ஒன்றிய அளவில்**

வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிடப்படும் போது, பள்ளிப்பார்வை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

➢ **மாவட்ட அளவில்**

மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர், பள்ளி துணை ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு முறையும் சிறார் திரைப்படம் திரையிடப்படும் போது, பள்ளிப்பார்வை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாது பின்பற்றி ஒவ்வொரு மாதமும், பரிந்துரைக்கப்படும் திரைப்படத்தினை பள்ளிகளில் 6–9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திரையிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதனை தொடர்ந்து சிறார் திரைப்பட மன்ற செயல்பாடுகள் மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :

1. பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடுதல் சார்ந்த வழிகாட்டும் நெறிமுறைகள்.
2. திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்
3. சிறார் திரைப்படம் திரையிடப்பட்ட பின்னர் பொறுப்பாசிரியர் மாணவர்களுக்கு சிறார் திரைப்பட மன்ற செயல்பாடுகள் மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்.
4. ஜூலை 2025 மாதத்திற்கான சிறார்திரைப்படத்தின் சுருக்கம்

பள்ளிக் கல்வி இயக்குநர்க்காக

24.07.25

Scanned with OKEN Scanner

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்

**நகல்**

1. மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600009.

2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–600006.

2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை–600006

Scanned with OKEN Scanner

இணைப்பு – 1 – பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடுதல் சார்ந்த வழிகாட்டும் நெறிமுறைகள்:

- அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைபள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, குறிப்பிட்ட சிறார் திரைப்படங்கள் திரையிடலுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பிரிவேளைகளில் இத்திரைப்படத்தினை திரையிடுதல் வேண்டும்.
- இணைப்பு – 2ல் வழங்கப்பட்டுள்ள திரைப்படம் திரையிடலுக்கான நிகழ்ச்சி நிரல் பின்பற்றப்படுதல் வேண்டும்.
- பள்ளி சூழலுக்கேற்ப, மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பின் முன்கூட்டியே திட்டமிட்டு மாணவர்களை குழுக்களாக பிரித்து கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி திரையிடல் நிகழ்வினை மேற்கொள்ள வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் திரைப்படத்தை காண்பதற்கு நல்ல காற்றோட்டத்துடன் போதுமான இடவசதி உள்ள அறையை தெரிவு செய்ய வேண்டும்.
- திரையிடுதலுக்கு முன், திரைப்படக்காட்டி மற்றும் ஒலிப்பெருக்கி சாதனங்கள் சரியாக இயங்குவதை உறுதி செய்திட வேண்டும். குழந்தைகள் சிறந்த திரைப்பட அனுபவத்தை பெற ஏதுவாக, வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்றுவசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.
- மின்சாதனங்கள் அதிக வெப்பமடையாதிருக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன் மின் இணைப்புகள் அனைத்தும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், மின்சாதனங்களை மாணவர்கள் எளிதில் அணுக இயலாத வகையில் உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

  குறிப்பு: EMIS வாயிலாக வழங்கப்படும் இத்திரைபடம் மாணவர்களுக்கென பிரத்யேகமாக தொகுக்கப்பட்டுள்ளது. எனவே, EMIS தளத்திலிருந்து மட்டுமே திரைப்படத்தினை திரையிடுதல்/பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பிற வலைதளங்களிலிருந்து இத்திரைப்படம் திரையிடுதல்/பதிவிறக்கம் செய்தல் கூடாது.
- EMIS இணையவழியே தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான உள்நுழைவு அடையாளங்களை பயன்படுத்தி, திரைப்படத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முன்கூட்டியே, பதிவிறக்கம் செய்து, பென்–டிரைவ் அல்லது DVDல் சேமித்து வைத்து Hi–tech lab/TV/Projector/Smart Board வாயிலாக ஒலிபெருக்கி (Speaker) வசதியுடன் மாணவர்களுக்கு திரையிட வேண்டும். இவ்வசதி இல்லாத பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
- திரைப்படம் திரையிடப்படுவதற்கு முந்தைய வாரத்தில், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் EMIS செயலியில் உள்ள திரைப்படத்தின் சுவரொட்டியினை (Poster)

Scanned with OKEN Scanner

(A4 அளவு தாளிற்கு குறைவில்லாமல்) பள்ளி வளாகத்தில் மாணவர்கள் அறிந்திடும்வகையில், அறிவிப்பு பலகையில் ஒட்ட வேண்டும்.

- திரையிடப்படவுள்ள திரைப்படத்தின் கதைச்சுருக்கம் முன்கூட்டியே வழங்கப்படும். திரைப்படம் திரையிடும் நாளுக்கு முன்னரே தலைமையாசிரியர்/பொறுப்பாசிரியர் திரைப்படத்தைப் பார்க்க வேண்டும். திரையிடப்படுவதற்கு முன்னர், மாணவர்களை ஆர்வமூட்டும்வகையில், திரைப்படம் சார்ந்து சிறு முன்உரையாடல் நிகழ்த்தப்பட வேண்டும்.
- திரைப்படம் திரையிடப்பட்டு முடிந்த பிறகு, படத்தின் மையக்கருத்து/திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து உரையாடல் நிகழ்த்த ஏதுவாக கலையில் ஆர்வமுள்ள துறைசார் வல்லுநரை சிறப்பு அழைப்பாளராக அழைக்கலாம்.
- திரையிடும்போது தொழிற்நுட்ப காரணங்களால் இடையூறுகள் ஏதேனும் ஏற்படின், திரையிடுதலை தற்காலிகமாக நிறுத்தி, சரிசெய்து திரையிடுதல் மீள தொடங்கப்பட வேண்டும்.
- திரையிடல் நிகழ்வினை ஆவணப்படுத்தும்பொழுது மாணவர்களின் கவனத்தை சிதறடிக்காத வண்ணம் செயல்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

## இணைப்பு 2 : திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்

| வ .எண் | கால அளவு | செயல்பாடுகள் | நடத்தக்கூடியவர் / உறுதி செய்பவர் |
|---|---|---|---|
| 1 | 10 நிமிடங்கள் | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா என்பதை உறுதிபடுத்துதல் | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | 10 நிமிடங்கள் | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் அமரச் செய்தல் | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 3 | 5 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் அறிமுகம் (சிறப்பு அழைப்பாளர் திரைப்படம் தொடங்கும் முன்னரே வருவதை உறுதிபடுத்தி கொள்ளவும்) | த.ஆசிரியர்/ பொறுப்பு ஆசிரியர் |
| 4 | 5 நிமிடங்கள் | படத்தின் அறிமுகம் (கதை சுருக்கம்) (இணைப்பு – 4) | பொறுப்பு ஆசிரியர் |
| 5 | 30 நிமிடங்கள் | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | 10 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 7 | 10 நிமிடங்கள் | • ஒவ்வொரு குழுவும் திரைப்படத்தின் மூலக்கரு / மையக்கருத்து குறித்தும். அக்கருத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தல் வேண்டும்.<br>• ஒவ்வொரு குழுவும் திரையிடப்பட்ட படத்தில் இசைக்கு எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தல் வேண்டும். | பொறுப்பாசிரியர் மாணவர்களை மகிழ்முற்றம் மாணவர் குழுக்களாக பிரித்து அமரச்செய்து ஒவ்வொரு குழுவிடமும் இக்கருத்துக்களை பெறுதல் |
| 8 | 30 நிமிடங்கள் | இணைப்பு – 3–ல் கொடுக்கப்பட்டுள்ள சிறார் திரைப்பட மன்ற செயல்பாடுகளில் ஏதேனும் ஒரு செயல்பாட்டினை தெரிவு செய்து மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக செயல்பாட்டினை மேற்கொள்ளுதல் | பொறுப்பாசிரியர் ஒவ்வொரு குழுவினிடம் அவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்தி எடுத்துரைக்க செய்து ஒவ்வொரு குழுவிற்குமான மதிப்பெண்களை வழங்குதல் |
| 9 | 5 நிமிடங்கள் | பொறுப்பாசிரியர் ஒவ்வொரு மாணவர் குழுக்களுக்கும் வழங்கிய மதிப்பெண்களை தெரிவித்தபின் அந்தந்த வகுப்பின் House Class Leader அதனை Class Room Score Board–ல் பதிவிடல் | பொறுப்பாசிரியர் மற்றும் House Class Leader |
| 10 | 5 நிமிடங்கள் | நன்றி உரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |

Scanned with OKEN Scanner

**இணைப்பு-3**

சிறார் திரைப்படம் திரையிடப்பட்ட பின்னர் பொறுப்பாசிரியர் பின்வரும் செயல்பாடுகளில் ஏதேனும் ஒரு செயல்பாட்டினை தேர்ந்தெடுத்து மாணவர்களை மகிழ்முற்றம் மாணவர் குழுக்களாக பிரித்து அச்செயல்பாட்டினை மேற்கொள்ளச் செய்தல் வேண்டும்.

- திரைப்படத்தில் தங்களுக்கு மிகவும் பிடித்த கதாபாத்திரம் யார் என்பதையும் அதற்கான காரணத்தையும் எடுத்துரைத்தல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தின் முடிவினை வேறொரு முடிவாக தங்களின் கற்பனைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து எடுத்துரைத்தல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தின் ஏதேனும் ஒரு பகுதியை (Scene) தேர்ந்தெடுத்து நடித்துக்காட்டுதல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தினை பற்றி விமர்சனம் எழுதுதல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தின் மையக்கருத்தினைக் கொண்டு தங்களின் கற்பனைக்கு ஏற்றவாறு வேறொரு கதையை எழுதி எடுத்துரைத்தல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தின் ஏதேனும் ஒரு பகுதியை (Scene) தேர்ந்தெடுத்து அதற்கான வசனத்தை தங்களின் சொந்த நடையில் எழுதி நடித்தல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்தில் சிறந்த ஐந்து பகுதிகளை (Scenes) பற்றி எடுத்துரைத்தல்.
- திரையிடப்பட்ட திரைப்படத்திற்கான விளம்பர திரைப்பட சுவரொட்டியை (Promotional Poster) உருவாக்குதல்.

**இணைப்பு-4**


**கதை சுருக்கம்-** டாப் 10

இயக்கம்: 6-9 வகுப்பு அரசுப் பள்ளி மாணவர்கள்

வெளியான ஆண்டு: 2024-25

மொழி: தமிழ்

திரைப்படத்தின் காலம்: 45 நிமிடங்கள்




உங்கள் கண்களுக்கு காட்சியாக போகும் இந்த சிறார்கள் திரைப்படங்கள் ஒரே இடத்தில் அவர்களின் பன்முகத்தன்மையை இனம் கண்டு உருவாக்குவதற்காக ஒரு திரைப்படத்தை எப்படி பார்க்க வேண்டும், எப்படி புரிந்து கொள்ள வேண்டும், ஒரு திரைப்படத்தின் திரைக்கதை என்பது என்ன? படத்தொகுப்பு என்பது என்ன?

Scanned with OKEN Scanner

இயக்கம் என்பது என்ன? நடிப்பு என்பது என்ன? காட்சி அமைப்பு என்பது என்ன? என்பதெல்லாம் பல்வேறு ஆளுமைகளால் மூன்று நாள் பயிற்சி வகுப்பாக சொல்லித் தரப்பட்டு அதன் பின் சிறார்கள் தன்னுடைய பார்வையில் கதைகள் உருவாக்கி எடுக்கப்பட்டவை ஆகும். அந்தக் கதைகளை சின்னஞ்சிறு கற்பனை கூட்டுக்குள் நட்பு என்றால் என்ன? நூலகம் என்ன செய்யும்– புத்தகம் எல்லாவற்றையும் விட உயரமானது, ஊனம் ஒரு தடை அல்ல, இயற்கையை நேசிப்போம், படித்தால் தான் உயர முடியும், ஒவ்வொருவரின் உழைப்பும் அங்கீகரிக்கப்பட வேண்டும்; என்று பறந்து விரிந்த பார்வையில் பண்பாட்டின் கலாச்சார கூறுகளை புரிந்து கொண்டவர்களாக மழலைகள் ஒரே நாளில் யோசித்து இயக்கி படத்தொகுப்பு செய்து இனிமையான இசை கோர்ப்போடு தந்தவைதான் இந்த படைப்புகள்.

இவை அனைத்தும் திரைத்துறையைச் சேர்ந்த இயக்குனர்கள் சிறந்த பட தொகுப்பாளர் இவர்கள் முன்னால் திரையிடப்பட்டு, சிறந்த நடிகர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த இயக்குனர், சிறந்த இசை கோர்ப்பு என்று பல்வேறு விதமான விருதுகள் வழங்கப்பட்டு மழலைகளின் எண்ணம் திரை வானில் மின்னும் நட்சத்திரங்களாக நாளை உலா வர அவர்களுக்கு இந்தத் திரை மொழி பகிரப்பட்டு இன்றைக்கு உணர்வும் அறிவும் கலந்த உன்னதமாக உங்கள் பார்வைக்கு வருகிறது

**************

24/7/25
இயக்குநகத்காக

24.07.25

Scanned with OKEN Scanner